செ.வெ. எண்: 631 **27–7–2010**

# செய்தி வெளியீடு

## மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு கடனுதவிகள் வழங்க அரசின் உத்திரவாதத் தொகை ரூ.4.00 கோடியிலிருந்து ரூ.8.00 கோடியாக உயர்த்தி முதலமைச்சர் ஆணை

மாற்றுத் திறனாளிகள் தங்களுக்குரிய உரிமைகளைப் பெற்று, பொருளாதார மேம்பாடு அடைய தமிழக அரசு பல முன்னோடித் திட்டங்களைத் செயல்படுத்தி வருகிறது.

ஒரு கருணை சார் விஷயமாக இருந்த மாற்றுத் திறனாளிகளின் நலனை ஒரு உரிமைசார் விஷயமாக கொண்டு செல்வதில் ஒரு பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

**சுயவேலைவாய்ப்பு:**

மாற்றுத் திறனாளிகள் இந்த சமுதாயத்தில் கண்ணியமாக வாழ்ந்திட அவர்களது பொருளாதாரத் தேவைகள் சுயவேலைவாய்ப்பு மூலம் பூர்த்தி அடைய இலகுவான கடனுதவிகள் தமிழக அரசால் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், இத்திட்டத்தை தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு

ரூ.50,000/– வரைக்கான கடன் மிகக் குறைந்த வட்டியான 5% சதவீதத்திலும், ரூ.50,000/– முதல் ரூ.5.00 இலட்சத்துக்கான கடனுக்கு வட்டி 6 சதவீதத்திலும் வழங்கப்படும்.

கடந்த ஆண்டு வரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 4773 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10.70 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், தமிழக அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கான கடனுதவித் தொகையை ரூ.7.00 கோடி அளவில் உயர்த்தி வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை செயல்படுத்த இதுவரை தமிழக அரசு, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு வழங்கி வந்த உத்திரவாதத் தொகையை ரூ.4.00 கோடியிலிருந்து இரண்டு மடங்காக்கி, ரூ.8.00 கோடியாக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி இந்த ஆண்டு கூடுதல் எண்ணிக்கையில் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் சுயவேலைவாய்ப்புக் கடனுதவிகள் பெற்றிட ஏதுவாக அரசின் உத்திரவாதத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.**